செ.வெ.எண்:37 நாள்:13.07.2019

**கரூர் மாவட்டம்**

**திருவள்ளுவர் மைதானத்தில் அரசுப்பொருட்காட்சி 27.07.2019 அன்று முதல் கோலாகலமாக நடைபெறவுள்ளது - பொதுமக்கள் பார்த்து பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்டம், திருவள்ளுவர் மைதானத்தில் 27.07.2019 அன்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசுப்பொருட்காட்சி தொடங்கப்படவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று(12.07.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து விளக்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அனைத்துத்துறைகளையும் ஒருங்கிணைத்து ஆண்டுதோறும் அரசுப்பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது. நமது கரூர் மாவட்டத்தில் சென்ற ஆண்டு முதன்முறையாக இந்த அரசுப்பொருட்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல, இந்த ஆண்டிற்கான பொருட்காட்சி கரூர் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் மைதானத்தில் 27.07.2019 அன்று தொடங்கி தொடர்ந்து 45 நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது.

மாண்புமிகு போக்குவரத்துத்தறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களும் பொருட்காட்சியினை தொடங்கி வைக்க உள்ளார்கள். மேலும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்துத்துறை அலுவலர்களும் பங்கேற்கவுள்ளார்கள்.

இந்தப் பொருட்காட்சியில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட சுமார் 40 அரசுத்துறைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டு, அந்ததந்த துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கப்படவுள்ளது. பொருட்காட்சியில் அரங்குகள் அமைக்கும் துறைகள், பொதுமக்கள் அரசின் திட்டங்களை பெறுவதற்கு என்ன தகுதிகளைப்பெற்றிருக்க வேண்டும், யாரிடத்தில், எங்கு விண்ணபிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பயனுள்ள தகவல்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள், கையேடுகள் ஆகியவற்றை பார்வையாளர்களுக்கு வழங்க வேண்டும். அரசுத்துறை அரங்குகள் மட்டும் இல்லாது பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய விளையாட்டுகளும், தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. பொருட்காட்சியானது தினமும் மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்திருக்கும்.

அதிக அளவிலான பொதுமக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் பாதுகாப்பு காரணங்கள் கருதி சுகாதாரத்துறையின் சார்பில் ஒரு மருத்துவக்குழுவும், 108 அவரச ஊர்தியும், தீயணைப்புத் துறையின் சார்பில் தீயணைப்பு வாகனமும், தேவையான அளவு தீத்தடுப்பு வாளிகளையும், தீ அணைப்புக் கருவிகளையும் பொருட்காட்சி தொடங்கும் நாளில் இருந்து முடிவடையும் காலம் வரை பொருட்காட்சி நடைபெறும் மைதானத்தில் தயார்நிலையில் இருக்க வேண்டும். நகராட்சியின் சார்பில் போதிய கழிப்பிட வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும்.

பேருந்துகள் அரசுப்பொருட்காட்சி மைதானம் வழியாக செல்வதற்கு போக்குவரத்துத்துறையினர் தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டம். பேருந்துகளில் “அரசுப்பொருட்காட்சி” என்ற ஒட்டுவில்லைகளையும் ஒட்டியிருக்க வேண்டும். தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்படும் இந்த அரசுப்பொருட்காட்சியினை அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்களை ஒரு வாய்ப்பாக பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையல் அனைத்துத்துறை அலுவலர்களும் சிறப்பாக செயல்பட்டு, நல்ல முறையில் அரசுப்பொருட்காட்சியினை நடத்த ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.செல்வசுரபி, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.கும்மராஜா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.க.பாவேந்தன், துணை ஆட்சியர் பயிற்சி செல்வி.விஷ்ணுபிரியா, கரூர் கோட்டாட்சியர் திருமதி.சந்தியா, சமுக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.கணேஷ்,. மாவட்ட ஆதி திராவிடர்நல அலுவலர் திருமதி.லீலாவதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.க.செந்தில்குமார், திரு.அ.ராஜாமணி உள்ளிட்ட அனைத்துத்துறைகளின் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**